TNPSC - GR-IV - EXAM

ஒரிஜினல் வினாத்தாள் – விடைகளுடன் - 25.8.2013

பொதுத் தமிழும் பொது அறிவும்

1. பொருளுக்கு ஏற்ற பொருத்தமான உவமையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
உலக நிலைகளை அறியாதிருத்தல்
A) கீரியும் பாம்பும் போல
B) இலவு காத்த கிளி போல
C) கிணற்றுத் தவளை போல
D) அனலிடைப்பட்ட புழு போல

2. இலக்கணக் குறிப்பறிதல் :
பின்வரும் இலக்கணக் குறிப்புக்குப் பொருந்தாதச் சொல்லைத் தேர்ந்தெடுக்கவும்.
பண்புத்தொகை
A) நெடுந்தேர் **B)** மலர்ச்சேவடி
C) செங்கோல் **D)** கருங்குரங்கு

3. பெயர்ச்சொல்லின் வகையறிதல் :
'கரியன்' – என்ற பெயர்சொல்லின் வகை அறிக.
A) சினைப்பெயர் **B)** பொருட்பெயர்
C) பண்புப்பெயர் **D)** தொழிற்பெயர்

4. "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்" இப்பாடலடிகளில் இடம்பெற்றுள்ள 'நடலை'க்கு இணையான ஆங்கிலச் சொல்லை எழுதுக.
A) Affection **B) Affliction**
C) Attraction **D) Addition**

5. பெயர்ச்சொல்லின் வகையறிதல் :
'ஆதிரையான்' என்ற பெயர்ச்சொல்லின் வகையறிக.
A) பண்புப்பெயர் **B)** தொழிற்பெயர்
C) காலப்பெயர் **D)** குணப்பெயர்

6. "இழுக்க லுடையுழி ஊற்றுக்கோ லற்றே ஒழுக்க முடையார்வாய்ச் சொல்".
அடிக்கோடிட்ட சொல்லுக்கு இணையான ஆங்கிலப் பதத்தினைத் தேர்க.
A) An assistant **B) Supporter**
C) Staff **D) Friends**

7. தன்வினை வாக்கியத்தைக் கண்டறிக.
A) இலக்கியா புத்தாடை அணிவித்தாள்
B) இலக்கியா புத்தாடை அணிந்தாள்
C) புத்தாடை இலக்கியாவால் அணிவிக்கப்பட்டது
D) இலக்கியா புத்தாடை அணியாள்

8. திரு.வி.க. இயற்றிய 'பொதுமை வேட்டல்' என்னும் நூலில் உள்ள பாக்களின் எண்ணிக்கை _____
A) நானூற்று முப்பது
B) இருநூற்று ஒன்று
C) முந்நூற்று ஆறு
D) நானூற்று எழுபது

9. தழீஇ : இலக்கணக் குறிப்பு தருக.
A) செய்யுளிசை அளபெடை
B) ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்
C) இன்னிசையளபெடை
D) சொல்லிசை அளபெடை

10. உலகம் என்ற தமிழ்ச் சொல்லின் வேர்ச்சொல் எது?
A) உலகு **B)** உலவு
C) உளது **D)** உளம்

11. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?
A) அவன் கவிஞன் அல்லர்
B) அவன் கவிஞன் அன்று
C) அவன் கவிஞன் அல்லன்
D) அவன் அல்லன் கவிஞன்

12. ஞானப்பச்சிலை எனப் போற்றப்படும் மூலிகை _____
A) துளசி **B)** கீழாநெல்லி
C) தூதுவளை **D)** கற்றாழை

13. இலக்கணக் குறிப்பறிதல் :
பின்வரும் இலக்கணக் குறிப்புக்கு பொருந்திய சொல்லைத் தேர்ந்தெடுக்க.
வினைத்தொகை.
A) செந்நாய் **B)** சூழ்கழல்
C) வெண்மதி **D)** கண்ணோட்டம்

EXAM மாஸ்டர்

14. கோடிட்ட இடத்தை நிரப்புக :

தில்லையாடி வள்ளியம்மை _____ நாட்டில் பிறந்தார்.

A) அமெரிக்கா **B)** இத்தாலி

C) இந்தியா

D) தென்னாப்பிரிக்கா

15. 'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' என்று சொல்லக் கேட்டு பாடப்பட்ட நூல் எது?

A) அசதிக் கோவை

B) ஆசாரக் கோவை

C) திருக்கோவையார்

D) மும்மணிக் கோவை

16. பரணி இலக்கியத்திற்குரிய பாவகையைக் குறிப்பிடுக.

A) வெண்பா **B)** விருத்தப்பா

C) கலி விருத்தம் **D)** கலித்தாழிசை

17. பட்டியல் I-இல் உள்ள சொற்றொடரைப் பட்டியல் II-இல் உள்ள சொற்றொடருடன் பொருத்தி குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.

பட்டியல் I	பட்டியல் II
a. களவழி நாற்பது	1. நிலையாமை
b. முதுமொழிக் காஞ்சி	2. வேளாண் வேதம்
c. நாலடியார்	3. ஆறு மருந்து
d. ஏலாதி	4. புறப்பொருள்

	a)	b)	c)	d)
A)	3	1	2	4
B)	2	3	4	1
C)	1	3	4	2
D)	4	1	2	3

18. பொற்கொடி ஆயகலை அறுபத்து நான்கினையும் கற்றாள் – இவ்வாக்கியம் எவ்வகை வினை சார்ந்தது?

A) பிறவினை **B)** தன்வினை

C) கலவை

D) செயப்பாட்டு வினை

19. பொருந்தாத தொடரைக் கண்டறிக.

A) ஒறுத்தார் – பொறுத்தார்

B) அஞ்சாமை – துஞ்சாமை

C) அறிவுடையார் – அறிவிலார்

D) வையார் – வைப்பர்

20. வினாவிற்குரிய விடை எழுதுக :

காமராசரின் பிறந்த நாளை ஆண்டுதோறும் எந்த நாளாகக் கொண்டாடுகிறோம்?

A) கல்விப் பணி ஆற்றிய நாள்

B) கல்வி வளர்ச்சி நாள்

C) தொழில் முன்னேற்ற நாள்

D) தேசிய கல்வி நாள்

21. பெயர்ச்சொல்லின் வகை அறிக.

'நன்மை' என்பது

A) பொருட்பெயர் **B)** சினைப்பெயர்

C) பண்புப்பெயர் **D)** தொழிற்பெயர்

22. "நாட்டுதும் யாம்ஓர் பாட்டுடைச் செய்யுள்" என்று பாடத் தொடங்கிய புலவர் யார்?

A) கம்பர்

B) கபிலர்

C) இளங்கோவடிகள்

D) சீத்தலைச் சாத்தனார்

23. வினாவிற்குரிய விடை எழுதுக :

தமிழை ஆலென வளர்த்து மாண்புறச் செய்தவர் யார்?

A) பரிதிமாற் கலைஞர்

B) மு. வரதராசன்

C) தேவநேயப் பாவாணர்

D) புதுமைப்பித்தன்

24. கோடிட்ட இடத்தை நிரப்புக :

நிகண்டுகளில் மிகப் பழமையானது .....

A) சேந்தன் திவாகரம்

B) சூடாமணி நிகண்டு

C) அகராதி

D) இதில் எதுவும் இல்லை

25. பொருளறிந்து பொருத்துக :

a. ஓ	1. கோபம்
b. மா	2. சோலை
c. கா	3. நீர் தாங்கும் பலகை
d. தீ	4. திருமகள்

	a)	b)	c)	d)
A)	2	4	1	3
B)	1	3	4	2
C)	3	4	2	1
D)	4	1	3	2

26. 'முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை' இத்தொடரில் 'பாணிரண்டு' என்ற தொடரால் குறிக்கப்படும் நூல்கள் எவை?

A) அகநானூறு, புறநானூறு

B) முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு

C) திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை

D) சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை

27. உரிய விடையைத் தேர்க :

அகராதி என்னும் சொல்லை முதன் முதலாக கையாண்டவர் யார்?

A) திருமூலர்

B) வீரமாமுனிவர்

C) திருநாவுக்கரசர்

D) கம்பர்

28. பொருத்துக :

a. Fanfare	1. இணக்கமுள்ள
b. Fangle	2. வீட்டுப் புறா
c. Fantail	3. எக்காள முழக்கம்
d. Facile	4. நாகரிகம்

	a)	b)	c)	d)
A)	3	4	2	1
B)	4	1	3	2
C)	2	3	4	1
D)	1	4	2	3

29. உரிய விடையைத் தேர்க :

திருக்குறளை நாற்பதாண்டுகள் படித்துச் சுவைத்த போப், அதனை ஆங்கிலத்தில் எந்த ஆண்டு மொழிபெயர்த்து வெளியிட்டார்?

A) 1786 **B)** 1858

C) 1808 **D)** 1886

30. வருக – என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க :

A) வினையெச்சம்

B) உருவகம்

C) உரிச்சொல் தொடர்

D) வியங்கோள் வினைமுற்று

31. பொருந்தாத தொடரைக் குறிப்பிடுக.

A) கலம்பகம் – பதினெட்டு உறுப்புகள்

B) சிற்றிலக்கியங்கள் – தொண்ணூற்றாறு

C) பிள்ளைத்தமிழ் – பத்துப் பருவங்கள்

D) பரணி – 100 தாழிசைகள்

32. பின்வரும் தொடர்களில் இராமலிங்க அடிகளார் கூறியவை

A) நான் தனியாக வாழவில்லை, தமிழோடு வாழ்கிறேன்

B) வெயிலுக்கு ஒதுங்கும் விருட்சம் அழிக்காதே

C) பெண்களே சமூகத்தின் கண்கள்

D) சமத்துவத்தின் மறுபெயரே மனிதநேயம்

33. பின்வரும் சொற்களுள் குற்றியலுகரம் அல்லாத சொல்லைக் கண்டறிக.

A) மார்பு **B)** வரகு

C) மடு **D)** மாசு

34. சித்துகளின் எண்ணிக்கை

A) பன்னிரண்டு

B) பதினெட்டு

C) பத்து

D) எட்டு

35. அடிவரையறை அறிந்து சரியான விடையைக் குறிப்பிடுக.

a. 3 – 6

b. 4 – 8

c. 9 – 12

d. 13 – 31

A) ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு

B) அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு

C) குறுந்தொகை, ஐங்குறுநூறு, நற்றிணை, அகநானூறு

D) நற்றிணை, அகநானூறு, ஐங்குறுநூறு, குறுந்தொகை

36. தன்வினையைத் தேர்ந்து எழுதுக.

A) அப்பூதி அடிகள் நான்மறை கற்கவில்லை

B) அப்பூதி அடிகள் நான்மறை கற்பித்தார்

C) அப்பூதி அடிகள் நான்மறை கற்றார்

D) அப்பூதி அடிகள் நான்மறை கற்றாரா?

EXAM PRIDE

37. பட்டியல் I-இல் உள்ள சொற்தொடரை பட்டியல் II-இல் உள்ள தொடர்களுடன் பொருத்தி கீழே உள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.

பட்டியல் I	பட்டியல் II
a. பேதையர் நட்பு	1. உடுக்கை இழந்தகை
b. பண்புடையார் தொடர்பு	2. வளர்பிறை
c. அறிவுடையார் நட்பு	3. நவில் தோறும்
d. இடுக்கண் களையும் நட்பு	4. தேய்பிறை

	a)	b)	c)	d)
A)	4	3	2	1
B)	3	4	2	1
C)	4	3	1	2
D)	1	2	3	4

38. சரியான விடையைத் தேர்வு செய்க.

'ஆயிடை அணங்கின் கற்பும் ஐய நின்னருளும் செய்ய தூய நல்லறனும் என்றிங்கிணைய தொடர்ந்து காப்ப' இவ்வரிகளில் சீதையை அழியாமல் காப்பாற்றியவை எவை?

A) அன்பும் பண்பும்
B) அறிவும் ஆற்றலும்
C) அறனும் மறனும்
D) கற்பும் அருளும்

39. 'வளன்' என்ற சொல்லால் குறிக்கப்படுபவன் யார்?

A) தாவீது
B) கோலியாத்து
C) சூசையப்பர்
D) சவுல் மன்னன்

40. கடலைக் குறிக்கும் தமிழ்ச் சொற்கள்

A) ஆழி, அம்பி, ஆர்கலி
B) பௌவம், முந்நீர், பரிசல்
C) ஆழி, ஆர்கலி, பௌவம்
D) வாரணம், பரவை, புணை

41. பொருத்தமான விடையைக் கண்டறி.

'தமிழுக்குக் கதி' என்று போற்றப்படும் நூல்கள்

A) பாட்டும் தொகையும்
B) சிலம்பும் மேகலையும்
C) இராமாயணமும் குறளும்
D) பாரதமும் இராமாயணமும்

42. பட்டியல் I-இல் உள்ள சொற்தொடரை பட்டியல் II-இல் உள்ள தொடர்களுடன் பொருத்திக் குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்வு செய்.

பட்டியல் I	பட்டியல் II
a. கண் வனப்பு	1. செல்லாமை
b. எண் வனப்பு	2. இத்துணையாம்
c. பண் வனப்பு	3. கண்ணோட்டம்
d. கால் வனப்பு	4. கேட்டார் நன்றென்றல்

	a)	b)	c)	d)
A)	3	2	4	1
B)	3	1	2	4
C)	1	2	4	3
D)	2	3	4	1

43. ஆற்றுப்படுத்தல் என்பதன் பொருள்

A) அன்பு காட்டுதல்
B) ஆறுதல் கூறுதல்
C) வழிகாட்டுதல்
D) ஆதரவு தருதல்

44. ஐஞ்சிறு காப்பியம் – இவற்றுள் பொருந்தா நூலைக் கண்டறி.

A) உதயண குமார காவியம்
B) இராவண காவியம்
C) நாக குமார காவியம்
D) யசோதர காவியம்

45. பட்டியல் I–ஐ பட்டியல் II–உடன் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடை தேர்க.

பட்டியல் I	பட்டியல் II
a. புள்	1. விரைவு
b. குலவு	2. கலப்பை
c. மேழி	3. அன்னம்
d. ஒல்லை	4. விளங்கும்

	a)	b)	c)	d)
A)	2	4	1	3
B)	4	1	2	3
C)	3	4	2	1
D)	3	1	4	2

EXAM மாஸ்டர்

46. பொருந்தாத இணையைக் கண்டறிக.

A) **Mishap** – விபத்து

B) **Miserable** – துக்ககரமான

C) **Mislay** – தவறான சொல்

D) **Misdeed** – கெட்ட செயல்

47. 'வாழ்த்துவோம்' என்ற சொல்லின் வேர்ச் சொல்லை எழுதுக.

A) வாழ் **B)** வாழ்த்துதல்

C) வாழ்த்து **D)** வாழ்த்தும்

48. பின்வரும் இரண்டினும் பொருள் பொருந்தாத இணையைத் தேர்ந்தெடு.

கழை	–	களை
A) கரும்பு	–	அழகு
B) மூங்கில்	–	காந்தி
C) வேய்	–	சீலை
D) கழி	–	அகற்று

49. சரியான பொருள் தருக :

'இந்து'

A) நிலவு **B)** துன்பம்

C) படகு **D)** தலைவன்

50. தொண்டுக்கு முந்து, தலைமைக்குப் பிந்து எனக் கூறியவர்

A) காந்தியடிகள்

B) பேரறிஞர் அண்ணா

C) மு. வரதராசனார்

D) பெரியார்

51. உரிய மரபுச் சொல்லை எழுதுக.

"மயில்"

A) கரையும் **B)** பிளிறும்

C) அலறும் **D)** அகவும்

52. 'வந்தான்' என்னும் வினைமுற்று ..... என வினையாலணையும் பெயராய் வரும்.

A) வருவான் **B)** வாரான்

C) வந்தவன் **D)** வந்த

53. ஆசிரியப்பாவின் ஈற்றுச்சீர் ..... முடிவது சிறப்பு.

A) ஆகாரத்தில்

B) ஏகாரத்தில்

C) ஓகாரத்தில்

D) ஈகாரத்தில்

54. "தித்திக்குந் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின்" கீழ்க்காணும் விடைகளுள் சரியான விடை எது?

A) எதுகை மட்டும் வந்துள்ளது

B) மோனை மட்டும் வந்துள்ளது

C) எதுகை, மோனை, இயைபு வந்துள்ளன

D) எதுகையும், மோனையும் வந்துள்ளன

55. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல்.

A) தரங்கம், தையல், திட்பம், தோடு

B) தையல், தோடு, திட்பம், தரங்கம்

C) தரங்கம், திட்பம், தையல், தோடு

D) தரங்கம், தையல், தோடு, திட்பம்

56. பொருத்துக:

புலவர்	நூல்
a. உமறுப்புலவர்	1. தொன்னூல் விளக்கம்
b. கம்பர்	2. நரிவிருத்தம்
c. திருத்தக்கதேவர்	3. சிலை எழுபது
d. வீரமாமுனிவர்	4. முதுமொழிமாலை

	a)	b)	c)	d)
A)	4	2	3	1
B)	4	3	2	1
C)	3	1	4	2
D)	2	4	1	3

57. "உறுமிடத் துதவா உவர்நிலம்" என்ற வரிகள் இடம்பெற்ற நூல் எது?

A) புறநானூறு **B)** அகநானூறு

C) ஐங்குறுநூறு **D)** திருக்குறள்

58. திரு.வி.க. எந்த நாளிதழ் ஆசிரியராக பணியாற்றினார்?

A) தேசபக்தன்

B) தென்றல்

C) இந்தியா

D) சுதேசமித்திரன்

59. 'பொறு' என்னும் வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைத் தேர்ந்தெடு.

A) பொறுத்தான் **B)** பொறுத்து

C) பொறுத்தல் **D)** பொறுத்தவர்

60. 'அன்பருக்குப் பணி செய்வதே உண்மைத் தொண்டு' எனக் கூறியவர் யார்?
A) இராமலிங்க அடிகள்
B) தாயுமானவர்
C) ஆறுமுக நாவலர்
D) குமரகுருபரர்

61. மனிதரெல்லாம் அன்புநெறி காண்பதற்கும் மனோபாவம் வானைப் போல் விரிவடைந்து – இப்பாடலில் கீழ்வரும் விடைகளில் பொருந்தாததைச் சுட்டுக.
A) அடி மோனை
B) அடி எதுகை
C) அடி இயைபு
D) சீர் மோனை

62. வினாவிற்குரிய விடை எழுதுக.
அம்பேத்கர் எந்த ஆண்டு கல்விக் கழகத்தைத் தோற்றுவித்தார்?
A) 1927
B) 1936
C) 1895
D) 1946

63. "கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும்
கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக"
– எனப் பாடியவர்
A) வள்ளலார்
B) பாரதியார்
C) பெருந்தேவனார்
D) பாரதிதாசனார்

64. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக :
பெண் அடிமை ஆனதற்கு உரிய காரணங்களில் ஒன்று எது இல்லாமை என்று பெரியார் கூறுகிறார்?
A) வாக்குரிமை
B) பேச்சுரிமை
C) சொத்துரிமை
D) எழுத்துரிமை

65. திரு.வி.க. பிறந்த துள்ளம் என்ற ஊர் தற்பொழுது ..... என்று அழைக்கப்படுகிறது.
A) பல்லவபுரம்
B) இலட்சுமிபுரம்
C) தண்டலம்
D) இராமவரம்

66. கோடிட்ட இடத்தை நிரப்புக:
கன்னியாகுமரிக்கும் மதுரைக்கும் இடையே அமைந்த நெடுஞ்சாலைக்கு பெயர் .....
A) தில்லையாடி வள்ளியம்மை
B) வேலுநாச்சியார்
C) இராணி மங்கம்மாள்
D) ஜான்சி ராணி

67. உரிய விடையை எழுதுக:
"உலகெல்லாம் உணர்ந்து ஓதற்கரியவன்" எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?
A) கந்தபுராணம்
B) திருமந்திரம்
C) பெரியபுராணம்
D) திருவிளையாடற்புராணம்

68. அகர வரிசைப்படி சொற்களைச் சீர்செய்தல்.
A) வீண், வீழ்ச்சி, வீடு, வீதி
B) வீடு, வீண், வீதி, வீழ்ச்சி
C) வீழ்ச்சி, வீண், வீதி, வீடு
D) வீழ்ச்சி, வீடு, வீதி, வீண்

69. எடு – என்னும் வேர்ச்சொல்லின் வினையெச்சத்தை எழுதுக.
A) எடுத்த
B) எடுத்தல்
C) எடுத்து
D) எடுத்தான்

70. கோடிட்ட இடத்தை நிரப்புக:
'ஞால்' என்பதற்கு ..... என்பது பொருள்.
A) தொங்குதல்
B) ஞாலம்
C) தொடங்குதல்
D) வாழுதல்

71. "வள்ளுவனைப் பெற்றதாற் பெற்றதே புகழ் வையகமே" – பாடியவர் யார்?
A) பாரதியார்
B) சுரதா
C) தாரா பாரதி
D) பாரதிதாசன்

72. விடைக்கேற்ற வினாவைத் தேர்க.
'அன்புள இனி நாம் ஓர் ஐவர்கள் உளரானோம்'.
A) எதனால் ஐவரானார்கள்?
B) ஐவர் யார்?
C) ஐந்தாவதாக வந்தவன் யார்?
D) யாரிடம் கூறினான்?

73. தமிழ் எழுத்துகளில் ஒரு நல்ல சீர்திருத்தத்–தினைக் கொணர்ந்தவர் யார்?
A) வேதநாயகம் பிள்ளை
B) வீரமாமுனிவர்
C) H.A. கிருஷ்ணப்பிள்ளை
D) உ.வே. சாமிநாதையர்

EXAM மாஸ்டர்

74. "இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும், அம்மென்றால் ஆயிரம் பாட்டும்" பாடவல்ல ஆசுகவி யார்?

A) காளமேகப்புலவர்

B) பாரதியார்

C) இளஞ்சூரியர்

D) முது சூரியர்

75. தவறான கூற்றைத் தேர்வு செய்க.

A) ''மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழகில்லேன்''–ஆண்டாள்

B) ''வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்''– குலசேகர ஆழ்வார்

C) ''கருவினும் கருவாய் பெருந்தவம் புரிந்த கருத்தனைப் பொருந்துதல் கருத்தே''– எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை

D) ''ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதி''– மாணிக்கவாசகர்

76. பொருத்துக:

a.	ஊ	1.	தலைவன்
b.	ஐ	2.	ஊன்
c.	நொ	3.	கடவுள்
d.	தே	4.	துன்புறு

	a)	b)	c)	d)
A)	1	4	3	2
B)	2	1	4	3
C)	4	3	2	1
D)	3	1	2	4

77. பொருத்துக:

a.	சிலப்பதிகாரம்	1.	சீர்திருத்தக் காப்பியம்
b.	மணிமேகலை	2.	சொற்போர் காப்பியம்
c.	சீவகசிந்தாமணி	3.	குடிமக்கள் காப்பியம்
d.	குண்டலகேசி	4.	வருணனைக் காப்பியம்

	a)	b)	c)	d)
A)	3	1	4	2
B)	3	2	4	1
C)	2	1	3	4
D)	4	3	1	2

78. சரசுவதி என்று சித்தர்கள் எதனைக் குறிப்பிடுகின்றனர்?

A) காசினிக் கீரை

B) வல்லாரைக் கீரை

C) பசலைக் கீரை

D) அகத்திக் கிரை

79. உரிய விடையைத் தேர்க.

தமிழ் படித்தால் எது பெருகும்?

A) புதுமை **B)** திறம்

C) அறம் **D)** புறம்

80. பொருத்துக:

a.	**Camphor**	1.	பொய்க்கதை
b.	**Chide**	2.	கலவரம்
c.	**Chaos**	3.	சலசலப்பு
d.	**Canard**	4.	கற்பூரம்

	a)	b)	c)	d)
A)	1	4	2	3
B)	3	1	4	2
C)	2	4	1	3
D)	4	3	2	1

81. நடிப்புச் செவ்வியும் இலக்கியச் செவ்வியும் ஒருங்கே அமையப்பெற்ற காப்பியம் எது?

A) சிலப்பதிகாரம் **B)** பாஞ்சாலி சபதம்

C) மனோன்மணீயம் **D)** மணிமேகலை

82. 'மருகி' என்பது யாரைக் குறிக்கும்?

A) மருமகள் **B)** மகள்

C) கொழுந்தி **D)** மாமியார்

83. பாரதியின் படைப்பில் இசையின் பெருமை பேசும் நூல் எது?

A) கண்ணன் பாட்டு **B)** குயில் பாட்டு

C) பாப்பா பாட்டு **D)** பாஞ்சாலி சபதம்

84. "புதுநெறிகண்ட புலவர்" என்று போற்றப்–பட்டவர்

A) இராமலிங்க அடிகளார்

B) தாயுமானவர்

C) திரு.வி.க.

D) கவிமணி

85. பட்டியல் I-இல் உள்ள சொற்றொடரைப் பட்டியல் II-இல் உள்ள சொற்றொடருடன் பொருத்தி கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.

பட்டியல் I	பட்டியல் II
a. அன்பிலார்	1. ஆர்வமுடைமை
b. அன்புடையார்	2. உயிர்நிலை
c. அன்பு ஈனும்	3. என்பும் உரியர்
d. அன்பின் வழியது	4. எல்லாம் தமக்குரியர்

	a)	b)	c)	d)
A)	2	3	4	1
B)	4	3	1	2
C)	1	4	2	3
D)	3	2	1	4

86. சரியான விடையைத் தேர்வு செய்க.
கம்பநாடகத்தின் யாப்பு வண்ணங்களின் எண்ணிக்கை

A) 100 **B)** 80
C) 96 **D)** 108

87. 'பண்ணொடு தமிழொப்பாய்' எனத் தொடங்கும் பாடல் இடம்பெறும் நூல்

A) திருவாசகம் **B)** தேவாரம்
C) திருக்கோவையார் **D)** திருமந்திரம்

88. பொருந்தாத தொடரைக் கண்டறி:

A) அடக்கம் அமரருள் உய்க்கும்
B) கற்க கசடற
C) தீதும் நன்றும் பிறர்தர வாரா
D) செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்

89. பொருத்துக:
யாருடைய கூற்று

a. தேரா மன்னா செப்புவது உடையேன்
b. தீயும் கொல்லாத் தீவினை யாட்டியேன்
c. சிறைக் கோட்டத்தை அறக் கோட்டமாக்குக
d. சீறடிச் சிலம்பு கொண்டுபோய் மாறிவருவன்

1 மணிமேகலை
2 கோவலன்
3 கண்ணகி
4 ஆதிரை

	a)	b)	c)	d)
A)	3	4	1	2
B)	3	4	2	1
C)	4	3	2	1
D)	1	2	3	4

90. 63 தனியடியார் வரலாற்றைக் கூறும் நூல் எது?

A) கந்தபுராணம்
B) திருவிளையாடற்புராணம்
C) பெரியபுராணம்
D) தணிகை புராணம்

91. பொருத்தமான பழமொழியைக் கண்டறி.
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்

A) ஞாயிறைக் கைமறைப்பார் இல்
B) முள்ளினால் முள்களையும் ஆறு
C) பாம்பு அறியும் பாம்பின் கால்
D) ஆற்று உணா வேண்டுவது இல்

92. 'செழுங்கனித் தீஞ்சுவை' என்ற சொற்றொடர் சரியாகப் பிரிக்கப்பட்டிருப்பது எது?

A) செழுமை + கனி + தீஞ்சுவை
B) செழும் + கனி + தீஞ்சுவை
C) செழும் + கனி + தீம் + சுவை
D) செழுமை + கனி + தீம் + சுவை

93. 'முடுகினன்' என்ற சொல்லுக்கு ஏற்ற எதிர்ச்சொல் எது?

A) செலுத்தினான்
B) நிறுத்தினான்
C) வளைத்தான்
D) முரித்தான்

94. "வையக மெல்லா மெமதென் றெழுதுமே" என்ற புகழ்ச்சிக்குரிய மன்னன் யார்?

A) சேரன்
B) பல்லவன்
C) சோழன்
D) பாண்டியன்

95. சரியானவற்றைக் காண்க.

(1) நீ + ஐ = நின்னை
(2) நீ + அது = நினது
(3) நீ + ஆல் = நீயால்
(4) நீ + கு = நீக்கு

A) 2, 3 – சரி **B)** 1, 2 – சரி
C) 3, 4 – சரி **D)** நான்கும் சரி

EXAM மாஸ்டர்

96. உவமைக்கு ஏற்ற பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

"கொக்கொக்க கூம்பும் பருவத்து"

A) காத்திருத்தல்

B) வெறுத்திருத்தல்

C) அறியாதிருத்தல்

D) மறந்திருத்தல்

97. பெயர்ச்சொல்லின் வகையறிதல்

சினைப் பெயரைத் தேர்ந்து எழுதுக.

A) ஊரன் **B)** மூக்கன்

C) வறியன் **D)** கடையன்

98. மனக்குகை – இலக்கணக் குறிப்பு எழுதுக.

A) வினைத்தொகை

B) உவமைத்தொகை

C) உருவகம்

D) உம்மைத்தொகை

99. இலக்கணக் குறிப்பறிதல்

சான்று : உளமனைய தண்ணளித்தாய் <u>உறுவேனிற்</u> பரிவகற்று

<u>'உறுவேனில்'</u> – இலக்கணம் தேர்ந்து எழுதுக.

A) வினைத்தொகை

B) அன்மொழித்தொகை

C) தொழில் பெயர்

D) உரிச்சொல் தொடர்

100. கீழ்க்காணும் தொடர்களில் எத்தொடர் சரியானது?

A) சன்மார்க்க கவி இராமலிங்க அடிகளார்

B) சிலம்புச் செல்வர் இளங்கோவடிகள்

C) இசைக்குயில் சரோஜினி நாயுடு

D) கவிக்கோ முடியரசன்

101. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

I. ஏட்ரியோ வென்டிரிகுலார் வால்வுகள் மூடுவதால் "லப்" என்ற ஒலி தோன்றுகிறது.

II. அரைச் சந்திர வால்வுகள் மூடுவதால் "டப்" என்ற ஒலி தோன்றுகிறது.

சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

A) I சரி II தவறு

B) I தவறு II சரி

C) I மற்றும் II தவறு

D) I மற்றும் II சரி

102. இரத்தம் உறைதலுக்கு அவசியமான வைட்டமின் மற்றும் தாது உப்பை (தனிமத்தை) பெயரிடு.


A) வைட்டமின் **D** மற்றும் கால்சியம்

B) வைட்டமின் **B** மற்றும் சோடியம்

C) வைட்டமின் **K** மற்றும் கால்சியம்

D) வைட்டமின் **C** மற்றும் அயோடின்

103. கொடுக்கப்பட்டுள்ள படத்தில் குறிக்கப்–பட்டுள்ள பாகங்களின் சரியான வரிசையைத் தேர்ந்தெடுக்கவும்.



A) (1) டி.யு.சி. வளையம் (2) எதிர்கோடான் வளையம் (3) டி.எச்.யு. வளையம்

B) (1) எதிர்கோடான் வளையம் (2) டி.யு.சி. வளையம் (3) டி.எச்.யு. வளையம்

C) (1) டி.யு.சி. வளையம் (2) டி.எச்.யு. வளையம் (3) எதிர்கோடான் வளையம்

D) (1) டி.எச்.யு. வளையம் (2) எதிர்கோடான் வளையம் (3) டி.யு.சி. வளையம்

104. ஒளிச்சேர்க்கையின் போது வெளியிடப்படும் வாயு எது?

A) கார்பன்–டை–ஆக்ஸைடு

B) நைட்ரஜன்

C) ஹைட்ரஜன்

D) ஆக்சிஜன்

105. பொருத்துக :

a.	ஆகஸ்ட் சலுகை		**1.** 1944
b.	**C.R.** திட்டம்		**2.** 1945
c.	வேவல் திட்டம்		**3.** 1946
d.	இடைக்கால அரசாங்கம்		**4.** 1940

	a)	**b)**	**c)**	**d)**
A)	4	3	2	1
B)	3	1	2	4
C)	4	1	2	3
D)	1	3	4	2

EXAM DIGEST

106. கீழ்க்கண்டவற்றை பொருத்துக :

a.	நேரு அறிக்கை	1. 1940
b.	இரண்டாவது வட்டமேஜை மாநாடு	2. 1928
c.	தனிநபர் சத்யாகிரகம்	3. 1946
d.	அட்லி பிரபுவின் அறிவிப்பு	4. 1931

	a)	b)	c)	d)
A)	2	4	1	3
B)	4	2	1	3
C)	2	4	3	1
D)	3	2	1	4

107. கீழே உள்ளவற்றைக் கொண்டு சரியான விடையளி.

கூற்று (A) : 1910 ஆம் ஆண்டு வ.உ. சிதம்பரம் பிள்ளை சுதேசிக் கப்பல் கம்பெனியை துவக்கினார்.

காரணம் (R) : கப்பலோட்டிய தமிழன் என்று வ.உ. சிதம்பரம் பிள்ளை அழைக்கப்–படுகிறார்.

சரியான விடையளி

A) **(A)** மற்றும் **(R)** இரண்டும் உண்மை

B) **(A)** மற்றும் **(R)** இரண்டும் உண்மை ஆனால் **(A)** வுக்கு சரியான விளக்கம் **(R)** இல்லை

C) **(A)** உண்மை **(R)** தவறானவை

D) **(A)** தவறு **(R)** உண்மையானவை

108. கீழ்க்கண்ட கூற்றுகளில் தவறானதைச் சுட்டிக்காட்டவும்:

I. வ.உ.சி. எட்டயபுரத்தில் பிறந்தார்.

II. அன்னி பெசன்ட் பிரம்ம ஞான சபையைத் தொடங்கினார்.

III. பாரதியார் பாண்டிச்சேரியில் மரணமடைந்தார்.

IV. சுய மரியாதை இயக்கத்தை ஈ.வெ.ரா. தொடங்கினார்.

சரியான விடையளி

A) I, III மற்றும் **IV**

B) II, III மற்றும் **IV**

C) I, II மற்றும் **IV**

D) I, II மற்றும் **III**

109. பின்வருவனவற்றுள் பொருந்தாதது எது?

A) வேளாண் பயிர்கள் – பசுமைப் புரட்சி

B) முட்டை மற்றும் கோழிவளர்ப்பு – வெண்மைப் புரட்சி

C) கடல்சார் பொருட்கள் – நீலப் புரட்சி

D) தோட்டக்கலை – தங்கப் புரட்சி

110. கீழ்க்கண்டவற்றுள் தவறானவைகள் எவை?

I. இந்திய உணவுப் பிரச்சினை தன்மை, உணவு தானியங்களின் தேவை அளிப்பை சார்ந்ததாகும்.

II. இந்திய உணவுப் பிரச்சினை தன்மை, தரம், பகிர்வு, பொருளாதாரம் சார்ந்தது.

III. இந்திய உணவுப் பிரச்சினை கொள்முதல் முறையை சிறப்பாக நடைமுறைப்படுத்தாத தேயாகும்.

IV. இந்தியாவின் உணவுப் பிரச்சினை தன்மை நியாயமான பங்கீடு கிடைக்கச் செய்யாத தேயாகும்.

சரியான விடையளி

A) **I** மற்றும் **II** தவறானது

B) **IV** மட்டும் தவறானது

C) **III** மற்றும் **IV** தவறானது

D) **I** மற்றும் **III** தவறானது

111. கீழ்காணும் அட்டவணையை கவனம் கொள்க.

வருடம் :	1973–74	1987–88	1993–94	1999–2000
இந்தியாவில் ஏழ்மையில் உள்ளவர்களின் எண்ணிக்கை (மில்லியனில்) :	321	307	320	260

எந்த வருடம், அதன் முந்தைய வருடத்தைக் காட்டிலும் இந்தியாவில் ஏழ்மையில் உள்ளவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது?

A) 1973–74 **B)** 1987–88

C) 1993–94 **D)** 1999–2000

112. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று (A) : மூன்றாம் ஐந்தாண்டு திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு திட்ட விடுமுறைக்காலம் பின்பற்றப்பட்டது.

கூற்று (R) : மூன்றாம் ஐந்தாண்டு திட்டம் இந்தியா–சீனா போரினாலும், இந்தியா–பாகிஸ்தான் போரினாலும் பாதிக்கப்பட்டது.

இவற்றுள் எது சரி என தீர்மானிக்கவும் :

A) **(A)** மற்றும் **(R)** தவறானவை

B) **(A)** தவறு மற்றும் **(R)** சரி

C) **(A)** சரி மற்றும் **(R)** தவறு

D) **(A)** மற்றும் **(R)** சரியானவை

113. **கூற்று (A) :** புயலின் போது அலைகளின் உயரத்தைக் குறைக்க கப்பலைச் சுற்றி எண்ணெய் ஊற்றப்படுகிறது.

கூற்று (R) : எண்ணெயின் பரப்பு இழுவிசை கடல் நீரின் பரப்பு இழுவிசையை விடக் குறைவு. அலையின் சீற்றத்தைக் குறைக்கும்.

A) **(A)** சரி **(R)** தவறு

B) **(A)** மற்றும் **(R)** சரி

C) **(R)** சரி **(A)** தவறு

D) **(A)** மற்றும் **(R)** இரண்டும் தவறு

114. பின்வருவனவற்றுள் எதில் மின்னூட்டங்களுக்–கிடையே உணரப்படும் விலக்கு மற்றும் ஈர்ப்பு விசை பயன்படுகிறது?

A) **A.C.** மின்னியற்றி

B) நிலைமின் வண்ணம் தெளித்தல்

C) மின்னழுத்தமானி

D) மீட்டர் சமனச்சுற்று

115. இரண்டு தனி ஊசலின் அலைவு காலம் 2 : 1 என்ற விகிதத்திலுள்ளது. அவைகளின் நீளத்திற்கான விகிதம் முறையே

A) 4 :1 **B)** 1 : 4

C) 1 : 1 **D)** 1 : 2

116. தொலை நுண்ணுணர்வு விண்கலங்களை அது விண்ணில் செலுத்தப்பட்ட வருடத்தைக் கொண்டு கீழிருந்து மேலாக அடுக்குக.

I. ஐ.ஆர்.எஸ் **II.** ஸ்பாட்

III. டிரையோஸ் **IV.** லாண்ட்சாட்

A) I, II, IV, III **B)** III, IV, II, I

C) I, II, III, IV **D)** IV, III, I, II

117. பொருத்தமற்ற இணையை தெரிந்தெடுக்க.

உயிர் கோளம்	மாநிலம்
A) கான்கா	– மத்தியப் பிரதேசம்
B) நந்தா தேவி	– உத்தராஞ்சல்
C) மானஸ்	– அசாம்
D) நாம்தாப்பா	– அருணாசலப் பிரதேசம்

A) I **B)** II

C) III **D)** IV

118. கீழே கொடுக்கப்பட்டவைகளில் இருந்து சரியான பதிலை தேர்ந்தெடுக்கவும் :

தொடர்ச்சியான இடியுடன் கூடிய புயலின் விளைவால் ஏற்படுவது.

A) நிலச்சரிவும் வெள்ளமும்

B) ஆழிப்பேரலைகள்

C) நிலநடுக்கம்

D) எரிமலை வெடிப்பு

119. உரம் பற்றிய கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானவை எவை?

I. அது விலை குறைவாக கிடைக்க வேண்டும்.

II. அது தாவரங்களால் எளிதில் உறிஞ்சத்தக்க வகையில் இருக்க வேண்டும்.

III. அது நீரில் எளிதில் கரையக்கூடாது.

A) I மற்றும் II **B)** II மற்றும் III

C) I மற்றும் III **D)** III மட்டும்

120. கீழே கொடுக்கப்பட்டுள்ள வேதிப் பொருட்களின் குழுமத்திற்குப் பொருந்தாததைக் கண்டறி:

BHC, DDT, 2,4-D, யூரியா

A) BHC **B)** DDT

C) 2, 4-D **D)** யூரியா

121. உச்ச நீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதி யார்?

A) அன்னா சான்டி

B) விஜயலெட்சுமி பண்டிட்

C) இந்திரா காந்தி

D) பாத்திமா பீவி

122. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி:

கூற்று (A) : நிர்வாக சீர்திருத்த ஆணையம்தான் லோக்பால் மற்றும் லோக்யக்தாயுக் ஏற்படுத்தியது.

கூற்று (R) : 1. இது சுதந்திரமாக செயல்–படுகிறது.

2. இதில் அரசியல் சாராதவர்கள் உள்ளனர்.

இவற்றுள் எது சரி என தீர்மானிக்கவும்.

A) **(A)** மற்றும் **(R)** இரண்டும் தவறு

B) **(A)** மற்றும் **(R)** இரண்டும் சரி

C) **(A)** தவறு ஆனால் **(R)** சரி

D) **(A)** சரி ஆனால் **(R)** தவறு

123. இந்தியாவின் குடியரசுத் தலைவர்களை, அவர்களின் பதவிக்கால அடிப்படையில் வரிசைப்படுத்துக.

I. ஆர். வெங்கட்ராமன்

II. டாக்டர் சங்கர் தயாள் சர்மா

III. டாக்டர் கே.ஆர்.நாராயணன்

IV. டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம்

சரியான விடையளி

A) I, II, III, IV B) III, IV, I, II

C) III, I, II, IV D) III, II, I, IV

124. போபால் துயரச் சம்பவம் நடைபெற்ற ஆண்டு

A) 1980 B) 1978

C) 1975 D) 1984

125. 'அக்னி சிறகுகள்' என்ற புத்தகத்தை எழுதியவர்

A) நேரு

B) A.P.J. அப்துல் கலாம்

C) காமராஜ்

D) மகாத்மா காந்தி

126. $2a \times 1a = 41a$ மற்றும் $2b \times 1b = 37b$ ஆகிய பெருக்கல்களில் a மற்றும் b என்பன மிகை முழு எண்களைக் குறித்தால், $a + b =$

A) 15 B) 11

C) 7 D) 13


127. பின்வரும் எண்கள் தொடர்வரிசையில் பொருந்தாத எண்ணைக் கண்டுபிடி.

1, 144, 16, 25, 49, 81, 121, 36, 62

A) 1 B) 49

C) 121 D) 62

128. 2011–2012 க்கான உலக தேயிலை உற்பத்தியில் 5 நாடுகளின் பங்கு :



வட்டத்தின் மையத்தில் E-ன் வட்டக்கோணம்

A) 15° B) 30°


C) 54° D) 72°

129. ஒரு தேர்வில் 30% மாணாக்கியர் ஆங்கிலப் பாடத்தில் தேர்ச்சி பெறவில்லை. 40% மாணாக்கியர் ஹிந்திப் பாடத்தில் தேர்ச்சி பெறவில்லை. இரண்டு பாடத்திலும் தேர்ச்சி பெறாதவர்கள் 20% என்றால் இரண்டு பாடத்திலும் தேர்ச்சி பெற்ற மாணாக்கியரின் சதவிகிதம் என்ன?

A) 50% B) 20%

C) 10% D) 60%

130. ஒரு பகடையின் 3 நிலைகள் கீழே தரப்பட்டுள்ளது.



2 ஆல் குறித்த பக்கத்திற்கு எதிர்பக்க எண் யாது?

A) 5 B) 3

C) 6 D) 1

131. RIVER என்பதை OFSBO எனும் குறியீட்டால் தரப்படின், WATER எனும் குறியீடு எதனைக் குறிக்கும்?

A) ZDWIU B) ZDWHU

C) ZCWIV D) ZCUJW

132. A என்பவர் ஒரு வேலையின் $\frac{2}{3}$ பகுதியை 10 நாட்களில் செய்து முடிப்பார். அதே வேலையின் $\frac{1}{3}$ பகுதியை A செய்து முடிக்க ஆகும் நாட்களின் எண்ணிக்கை

A) 3 நாட்கள் B) 4 நாட்கள்

C) 5 நாட்கள் D) 6 நாட்கள்

133. குறிப்பிட்ட தனிவட்டி வீதத்தில், ₹ 800 ஆனது மூன்றாண்டுகளில் ₹ 956 ஆக உயர்கிறது. தனிவட்டி வீதத்தை 4% அதிகரிப்பதால், மூன்றாண்டுகளுக்குப் பின் ₹ 800ன் மதிப்பு, எந்தத் தொகையாக மாறும்?

A) ₹ 1,02.80 B) ₹ 1,025

C) ₹ 1,052 D) ₹ 1,080.20


EXAM மாஸ்டர்

134. அமலா, ₹ 6000–த்தை ஒரு முதலீடு செய்கின்றார். இதில் முதலாண்டில் 4% வட்டியும், இரண்டாமாண்டில் 5% வட்டியும், மூன்றாமாண்டில் 10% வட்டியும் கிடைக்கும் எனில், மூன்றாமாண்டின் முடிவில் அமலா பெறும் தொகை யாது?

A) ₹ 7,300 B) ₹ 7,007.2

C) ₹ 7,200 D) ₹ 7,207.2

135. கேள்விக் குறியிட்ட இடத்தில் வரும் எண் யாது?



A) 9 B) 6

C) 7 D) 3

136. பின்வரும் தொடர்வரிசையில் தவறான எண் என்ன?

623, 251, 543, 356

A) 543 B) 251

C) 623 D) 356

137. பின்வரும் தொடர்வரிசையில் தவறான எண் என்ன?

121, 264, 312, 462, 583

A) 583 B) 264

C) 121 D) 312

138. பொருத்துக:

பட்டியல் I	பட்டியல் II
a. ஆந்திரா	1. பரதநாட்டியம்
b. கேரளா	2. குச்சிப்புடி
c. தமிழ்நாடு	3. பாங்ரா
d. பஞ்சாப்	4. கதகளி

குறியீடு :

	a)	b)	c)	d)
A)	1	2	3	4
B)	3	1	4	2
C)	2	4	1	3
D)	4	2	3	1

139. சென்னை மாநிலம் 'தமிழ்நாடு' என அண்ணா பெயர் மாற்றம் செய்த ஆண்டு

A) 1957 B) 1977

C) 1969 D) 1947

140. சரியான விடையை பொருத்துக :

a. லார்கானா மாவட்டம்	1. குஜராத்
b. காளிபங்கன்	2. பஞ்சாப்
c. லோத்தல்	3. இராஜஸ்தான்
d. ஹரப்பா	4. சிந்து

	a)	b)	c)	d)
A)	3	1	2	4
B)	4	3	1	2
C)	1	2	4	3
D)	2	4	3	1

141. பிரிவு I–யிலிருந்து பிரிவு II–ஐ பொருத்துக :

பிரிவு I (நூல்கள்)	பிரிவு II (ஆசிரியர்கள்)
a. கொன்றை வேந்தன்	1. மாயூரம் வேதநாயகம்
b. நீதிநெறி விளக்கம்	2. சிவபிரகாசர்
c. நன்னெறி	3. அவ்வையார்
d. நீதி நூல்	4. குமரகுருபரர்

	a)	b)	c)	d)
A)	2	3	4	1
B)	3	4	2	1
C)	3	2	1	4
D)	2	3	1	4

142. பட்டியல் I–யிலிருந்து பட்டியல் II–ஐ பொருத்துக :

பட்டியல் I (காலம்)	பட்டியல் II (கலை பாணி)
a. குஷாணர்கள்	1. திராவிடப் பாணி
b. குப்தர்கள்	2. வேசரா பாணி
c. சாளுக்கியர்கள்	3. நகரா பாணி
d. சோழர்கள்	4. காந்தாரக் கலை பாணி

	a)	b)	c)	d)
A)	4	3	2	1
B)	4	2	1	3
C)	3	2	1	4
D)	3	1	2	4

143. எழுத்தாளர்களையும் அவர்களின் புத்தகங்–களையும் பொருத்தி சரியான விடையை தேர்ந்தெடுக்கவும் :

a.	மால்குடி டேஸ்	1. கௌடில்யா
b.	ஹர்ஷா சரித்தா	2. சுவாமி தயாநந்தர்
c.	அர்த்த சாஸ்திரம்	3. ஆர். கே. நாராயண்
d.	சத்யர்த் பிரகாஷ்	4. பானா பட்டா

	a)	b)	c)	d)
A)	3	4	1	2
B)	2	3	4	1
C)	4	1	2	3
D)	3	1	4	2

144. சரியான விடையை தேர்ந்தெடுத்து பொருத்தவும்.

a.	அண்மையில் இராணுவப் புரட்சி ஏற்பட்டது	1. பிரேஸில்
b.	ஸ்னோடென்னின் புகலிட கோரிக்கையை நிராகரித்தது	2. இந்தியா
c.	தொடர் குண்டு வெடிப்பு நிகழ்ந்த மகாபோதி ஆலயம் உள்ள இடம்	3. இங்கிலாந்து
d.	10 வருடத்திற்குப் பிறகு ஆண்டிமூர்ரே விம்பிள்டன் பட்டம் பெற்று அவர் நாட்டிற்குப் புகழ் சேர்த்தார்	4. எகிப்து

	a)	b)	c)	d)
A)	4	3	2	1
B)	3	1	2	4
C)	2	3	4	1
D)	1	2	3	4

145. கீழ்க்கண்ட கருத்துகளில் தவறானதை சுட்டிக்காட்டு :

I.	தேசிய மிருகம்	-	புலி
II.	தேசியப் பறவை	-	மயில்
III.	தேசிய பூ	-	ரோஜா
IV.	தேசிய பழம்	-	மாம்பழம்

A) I B) II
C) III D) IV

146. உலக நாடுகளை, அமெரிக்க உளவு நிறுவனம், ரகசியமாக மின்னணு மூலம் கண்காணித்ததை உலகிற்கு வெளிப்படுத்திய அமெரிக்க உண்மை விளம்பி

A) ஜூலியன் அஸ்ஸானேஜ்
B) டானியல் ப்ர்ல்
C) எட்வர்ட் ஸ்னோடன்
D) மைக் டைசன்

147. எந்த அரசியலமைப்புச் சட்டம் குடியரசுத் தலைவருக்கு பாராளுமன்றத்தின் கீழ் அவையை கலைக்க அதிகாரம் அளிக்கிறது?

A) விதி 85 B) விதி 95
C) விதி 81 D) விதி 75

148. G–20 அமைப்பில் இடம் பெறாத நாடு எது?

A) அர்ஜென்டைனா
B) வடக்கு ஆப்பிரிக்கா
C) பொலிவியா
D) எகிப்து

149. பட்டியல் I–ஐ பட்டியல் II–உடன் சரியாகப் பொருத்தி விடையைத் தேர்ந்தெடு :

	பட்டியல் I	பட்டியல் II
a.	ரூமேட்டிக் மூட்டு வலி	1. பரவும் தொற்று நோய்
b.	பெல்லக்ரா	2. சுய நோய்த் தடுப்பு குறைபாடு நோய்
c.	காலரா	3. பாரம்பரிய நோய்
d.	கதிர் அரிவாள் இரத்த சோகை	4. வைட்டமின் குறைவினால் உண்டாகும் நோய்

	a)	b)	c)	d)
A)	3	1	2	4
B)	2	4	1	3
C)	2	1	4	3
D)	3	4	2	1

150. பட்டியல் I–இல் உள்ள வனவிலங்குகளின் சரணாலயங்களை பட்டியல் II–இல் உள்ள இருப்பிடங்களுடன் பொருத்துக :

பட்டியல் I	பட்டியல் II
a. விராலிமலை	1. மேற்குத் தொடர்ச்சி மலை
b. முக்குருத்தி தேசியப் பூங்கா	2. காஞ்சிபுரம் மாவட்டம்
c. இந்திராகாந்தி வன உயிரி சரணாயலம்	3. நீலகிரி மலை
d. வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம்	4. திருச்சி மாவட்டம்

	a)	b)	c)	d)
A)	3	1	2	4
B)	4	3	1	2
C)	1	2	4	3
D)	2	4	3	1

151. பின்வருவனவற்றுள் எது EMP வழித்தடம் எனவும் அழைக்கப்படும்?

A) கிளைகாலிஸிஸ் **B)** கிரெப் சுழற்சி
C) எலக்ட்ரான் கடத்தல் சங்கிலி
D) பென்டோஸ் பாஸ்பேட் வழித்தடம்

152. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று (A) : பூச்சியுண்ணும் தாவரம் பூச்சிகளின் உடலில் உள்ள புரோட்டீன்களை செரிக்கின்றன.

காரணம் (R) : பூச்சியுண்ணும்தாவரம்நைட்ரஜன் பற்றாக்குறை உள்ள மண்ணில் வளரும்.

சரியான விடையளி

A) **(A)** சரி ஆனால் **(R)** **(A)** –விற்கு சரியான விளக்கமல்ல
B) **(A)** மற்றும் **(R)** இரண்டும் சரி, மேலும் **(R)** என்பது **(A)**–விற்கு சரியான விளக்கம்
C) **(A)** சரி ஆனால் **(R)** தவறு
D) **(A)** மற்றும் **(R)** இரண்டும் தவறு

153. பின்வருவனவற்றுள் தவறானவை எது/எவை?

I. சர் சையத் அகமது கான் அலிகார் இயக்கத்தை வழி நடத்தினார்.
II. சர் யைத் அகமது கான் சுத்தி இயக்கத்தை ஆதரித்தார்.
III. சர் சையத் அகமது கான் ஆங்கிலோ–ஓரியன்டல் கல்லூரியை ஆரம்பித்தார்.

சரியான விடையளி

A) **II** மட்டும்
B) **I** மற்றும் **II**
C) **I** மற்றும் **III**
D) **I, II** மற்றும் **III**

154. பின்வருவனவற்றுள் எது சரியாக பொருந்தியுள்ளது?

A) எட்டயபுரம் – கலெக்டர் ஆஷ்
B) ஜாலியன் வாலாபாக் துயரம் – ஹண்டர் கமிட்டி
C) சுயராஜ்ஜிய கட்சி – **B.G.** திலகர்
D) மதுவிலக்கு – வ.உ. சிதம்பரனார்

155. பட்டியல் I–ஐ பட்டியல் II–உடன் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

பட்டியல் I	பட்டியல் II
a. தத்துவபோதினி சபை	1. ஹென்றி விவியன் தெரோஜியோ
b. இளம் வங்காள இயக்கம்	2. விஷ்ணு சாஸ்திரி பண்டிட்
c. விதவை மறுமண சங்கம்	3. வீரேசலிங்கம்
d. ஹிதகர்னி சமாஜம்	4. தேவேந்திரநாத் தாகூர்

குறியீடுகள் :

	a)	b)	c)	d)
A)	4	1	2	3
B)	4	3	2	1
C)	3	4	1	2
D)	2	1	4	3

156. இந்திய தேசிய உணர்வு விழிப்படையக் காரணமான கீழ்க்கண்டவற்றின் தன்மையைக் கவனி :

I. முக்கியமாக அது கற்றறிந்தோரால் தொடங்கப்பட்டது.
II. தேசிய இயக்கத்தில் சமுதாயத்தின் அனைத்து தரப்பு மக்களும் ஆங்கிலேயர்–களுக்கு எதிராக ஒருங்கிணைந்தனர்.
III. 1920–ற்குப் பிறகு காந்தியடிகள் அதற்கு தலைமையேற்று நடத்தினார்.
IV. காந்தியடிகள் கிலாபத் இயக்கத்தை ஆரம்பித்தார்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் சரியானவை எவை?

A) I மற்றும் II

B) I, II மற்றும் III

C) I மற்றும் III

D) II, III மற்றும் IV

157. இந்தியாவில் பசுமை புரட்சியை அறிமுகப்–படுத்திய அமைப்பு

A) ICAR B) ICMR

C) ISRO D) CSIR

158. ஐந்தாண்டுத் திட்டத்தினை வகுப்பது

A) தேசிய வளர்ச்சிக் குழு

B) பிரதம அமைச்சரின் அலுவலகம்

C) ஐக்கிய நாடுகள் சபை

D) திட்டக் குழு

159. பொருத்துக:

a.	ஜவகர் கிராம வேலை வாய்ப்புத் திட்டம்	1. 2000-2001
b.	நாட்டு சமூக உதவித் திட்டம்	2. 1993
c.	வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்	3. 1999
d.	பிரதமரின் வேலை வாய்ப்புத் திட்டம்	4. 1995

	a)	b)	c)	d)
A)	3	1	2	4
B)	4	3	1	2
C)	3	4	2	1
D)	2	3	1	4

160. கீழ்க்கண்டவற்றில் பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடுக்கவும்.

இந்தியாவின் நவரத்ன நிறுவனங்கள்

A) BHEL B) BPCL

C) IOL D) IPCL

161. நுகர்வோரியலின் தந்தை எனக் கருதப்படுபவர் யார்?

A) மஹாத்மா காந்தி

B) இந்திரா காந்தி

C) ஜான் F. கென்னடி

D) ரால்ப் ரேடர்

162. இந்தியாவில் பணக் கொள்கையை வடிவமைப்பது யார்?

A) இந்திய நிதியமைச்சர்

B) ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா

C) இந்தியப் பிரதமர்

D) பன்னாட்டு நிதி நிறுவனம்

163. கீழ்க்காணும் வாக்கியங்களை ஆய்க. அவற்றுள் சரியானதைத் தேர்வு செய்க.

வால் மீன்களில் வால்பகுதி எப்பொழுது தோன்றாது?

I. அவை சூரியனை விட்டு தொலைவில் இருக்கும் பொழுது.

II. அவை சூரியனுக்கு அருகில் இருக்கும் பொழுது.

III. அவை பூமிக்கு அருகில் இருக்கும் பொழுது.

IV. அவை பூமிக்கும், சூரியனுக்கும் இடையில் இருக்கும் பொழுது.

சரியான விடையளி


A) I, II, III மற்றும் IV தவறு

B) I சரியானது II, III மற்றும் IV தவறு

C) I தவறு ஆனால் II, III, IV சரி

D) I, II, III மற்றும் IV சரி

164. கப்பல் துறைமுகத்தினைத் தெரிந்தெடுத்து அதன் பெயரை குறியிடுக :



1. பாரதீப் 2. மங்களூர்

3. சென்னை 4. கொச்சின்

A) பாரதீப், கொச்சின், சென்னை, மங்களூர்

B) மங்களூர், பாரதீப், சென்னை, கொச்சின்

C) மங்களூர், கொச்சின், சென்னை, பாரதீப்

D) கொச்சின், மங்களூர், சென்னை, பாரதீப்

165. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.

I. சந்திரனை எரிநட்சத்திரம் என அழைக்கலாம்.

II. சந்திரனை துணைக்கோள் என அழைக்கலாம்.

III. சந்திரனை குறுங்கோள்கள் என அழைக்கலாம்.

IV. சந்திரனை வால் நட்சத்திரம் என அழைக்கலாம்.

சரியான விடையளி

A) I மற்றும் III மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) II மற்றும் IV சரி

D) IV மட்டும் சரி

166. சரியாகப் பொருந்தாதைக் கீழ்க்கண்டவற்றி–லிருந்து தேர்வு செய்க.

A) பசுமைப் புரட்சி – வேளாண் உற்பத்தி

B) வெண்மைப் புரட்சி – பால் மற்றும் பால் பொருட்கள்

C) சாம்பல் புரட்சி – எண்ணெய் வித்துக்கள்

D) பொன் புரட்சி – பழங்கள்

167. சரியான விடையை தேர்ந்தெடுக்க :

சாம்பல் நிற அணில்கள் சரணாலயம் எந்த மாவட்டத்தில் உள்ளது?

A) நீலகிரி

B) சிவகங்கை

C) விருதுநகர்

D) கன்னியாகுமரி

168. பென்சிலில் உள்ள எழுதும் பொருளின் கலவை

A) கார்பன் மற்றும் நைட்ரஜன்

B) கார்பன் மற்றும் ஆக்ஸிஜன்

C) கார்பன் மற்றும் களிமண்

D) கார்பன் மற்றும் கண்ணாடி

169. 'அமிலம்' பற்றிய கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானவை எவை?

I. அது நீல லிட்மஸ் தாளை சிவப்பாக மாற்றும்.

II. அது 7–ஐ விட அதிகமான **pH** மதிப்பு உடையது.

III. அது காரத்துடன் வினைபுரிந்து உப்பையும் நீரையும் தருகின்றது.

A) I மற்றும் II

B) I மற்றும் III

C) II மற்றும் III

D) III மட்டும்

170. 2011–ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினராக சேர்ந்த நாடு எது?

A) கிழக்கு தைமூர்

B) மாண்டிநிக்ரோ

C) தெற்கு சூடான்

D) செர்பியா

171. அரசியல் நிர்ணய சபையின் முதல் கூட்டம் நடைபெற்ற ஆண்டு

A) 1950 **B)** 1946

C) 1948 **D)** 1947

172. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று (A) : மத்தியப் புலனாய்வு அமைப்பு ஆண்டு அறிக்கையை குடியரசுத் தலைவரிடம் சமர்பிப்பர்.

காரணம் (R) : அதை குடியரசுத் தலைவர் இரண்டு அவைகளிலும் (லோக் சபா, இராஜ்யசபா) சமர்ப்பிப்பார்.

இவற்றுள் எது சரி என தீர்மானிக்கவும்.

A) **(A)** மற்றும் **(R)** இரண்டும் சரி

B) **(A)** மற்றும் **(R)** இரண்டும் தவறு

C) **(A)** தவறு ஆனால் **(R)** சரி

D) **(A)** சரி ஆனால் **(R)** தவறு

173. பாராளுமன்றத்தின் கூட்டு அமரவை (கூட்டத்தை) நடத்துவது யார்?

A) குடியரசுத் தலைவர்

B) துணைக் குடியரசுத் தலைவர்

C) சபாநாயகர்

D) பிரதம மந்திரி

174. தேசிய மேம்பாட்டு குழு எந்த ஆண்டு உருவாக்கப்பட்டது?

A) 1952 **B)** 1955

C) 1959 **D)** 1962

175. 2÷3 = 89, 3÷4 = 2716, 4÷3 = 649 எனில் 1÷2 = ?

A) 24 **B)** 14


C) 4 **D)** 10

176. வெவ்வேறான 5 பொருட்கள் A, B, C, D மற்றும் E ஆகியவற்றை 1, 2, 3, 4, 5 எனக் குறிக்கப்பட்ட பெட்டிகளில் வைக்க வேண்டும். B மற்றும் E ஆகியவற்றை ஒன்றாக வைக்க முடியாது, எனில் பொருட்கள் வைக்கப்படாத பெட்டிகளின் அதிகபட்ச எண்ணிக்கை

A) 1 B) 2

C) 3 D) 0

177. ABC என்ற பதிப்பகத்தின் இரு பிரிவு புத்தகங்களின் விற்பனை 2000–2010 (ஆயிரத்தில்)



2000 முதல் 2009 வரை எத்தனை ஆண்டுகள் அறிவியல் புத்தகங்கள் கலைப் புத்தகங்களை விட அதிகமாக விற்பனை செய்யப்பட்டது?

A) 4 ஆண்டுகள்

B) 5 ஆண்டுகள்

C) 6 ஆண்டுகள்

D) 7 ஆண்டுகள்

178. A, K, L, R மற்றும் U என்ற ஐவர் ஒரு வட்டமேசையை சுற்றி அமர்கின்றனர். U-க்கு இடப்பக்கத்தில் K வும் மற்றும் A வுக்கும் U வுக்கும் இடையில் R–ம் அமர்ந்திருந்தால் L–க்கு பக்கத்தில் இருபுறமும் அமர்ந்தவர்கள்

A) K மற்றும் A B) U மற்றும் A

C) K மற்றும் R D) A மற்றும் R

179. 7 மீ ஆரமுள்ள ஒரு வட்ட வடிவ மைதானத்தை சுற்றி வெளிபுறம் 7 மீ அகலத்தில் ஒரு பாதை உள்ளது எனில் பாதையின் பரப்பளவு _____

$\left(\pi = \frac{22}{7}\right)$

A) 154 ச.செ.மீ.

B) 308 ச.செ.மீ.

C) 462 ச.செ.மீ.

D) 616 ச.செ.மீ.

180. ஒரு வேலையை முழுமையாக தனித்தனியே செய்து முடிக்க A, B, C ஆகியோருக்கு 12 நாட்கள், 6 நாட்கள் மற்றும் 3 நாட்கள் ஆகும் என்க. A, B இருவரும் வேலையை செய்ய ஆரம்பித்து மறுநாள் C‌ம் அவர்களோடு வேலையை செய்தால், அந்த வேலையை முழுமையாக செய்து முடிக்கத் தேவையான நாட்கள்

A) $2\frac{2}{7}$ நாட்கள் B) $1\frac{2}{7}$ நாட்கள்

C) $2\frac{1}{7}$ நாட்கள் D) $1\frac{1}{7}$ நாட்கள்

181. கூட்டு வட்டி முறையில், ஒரு தொகையானது இரண்டு ஆண்டுகளில் ஒன்பது மடங்கு ஆகின்றது எனில், அதன் வட்டி வீதம் யாது?

A) 100% B) 200%


C) 300% D) 150%

182. சுருக்குக : $\sqrt[4]{\sqrt[3]{x^2}}$

A) $x^{1/6}$ B) $x^{1/12}$

C) $x^{1/3}$ D) $x^{1/4}$

183. விடுபட்ட படம் யாது?



A) 

B) 

C) 

D) 

184. 43, 91, 183 ஆகிய எண்களை எந்த மிகப் பெரிய எண்ணால் வகுக்கும் பொழுது மீதி சமமாக கிடைக்கும்?

A) 4 B) 7

C) 9 D) 8

EXAM மாஸ்டர்

185. மீப்பெரு பொது காரணி 15 ஆக இருக்குமாறு எத்தனை ஜோடி எண்கள் 40க்கும் 100க்கும் இடையே இருக்கும்?

A) 3 B) 4

C) 5 D) 2

186. ஒரு வட்டமான தோட்டத்தைச் சுற்றி ஒரே நேரத்தில் துவங்கி A, B, C, D என்பவர்கள் ஒரே திசையில் ஓடுகின்றனர். ஒரு முறை சுற்றி வர A, B, C, D என்பவர்கள் எடுத்துக் கொள்ளும் கால அளவு முறையே 30 நிமிடங்கள், 60 நிமிடங்கள், 90 நிமிடங்கள் மற்றும் 105 நிமிடங்கள் ஆகும். துவக்கப் புள்ளியில் எத்தனை மணிக்கு பிறகு இவர்கள் மீண்டும் சந்திப்பார்கள்?

A) 15 மணி நேரம்

B) 10 மணி நேரம்

C) 21 மணி நேரம்

D) 20 மணி நேரம்

187. எண்கள் 15, 25, 40 மற்றும் 75–ஆல் வகுபடும் மிகப்பெரிய நான்கு இலக்க எண் என்ன?

A) 9600 B) 3000

C) 9800 D) 8540

188. டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அவர்கள் ஆரம்பித்த ஆதரவற்றோர் இல்லத்தின் பெயர்

A) சரஸ்வதி இல்லம்

B) ஔவை இல்லம்

C) அன்பு இல்லம்

D) லட்சுமி இல்லம்

189. சரியாக பொருத்துக :

பட்டியல் I	பட்டியல் II
a. முதலாம் இராஜேந்திரசோழன்	1. பிரம்மகிரி
b. காரவேலர்	2. அலகாபாத்
c. அசோகர்	3. ஹதிகும்பா
d. சமுத்திரகுப்தர்	4. மால்பாடி

	a)	b)	c)	d)
A)	2	4	3	1
B)	3	1	2	4
C)	4	3	1	2
D)	1	2	4	3

190. வரிசை I உடன் வரிசை IIஐ பொருத்தி வரிசைகளுக்குக் கீழ்கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையை தெரிவு செய்க :

வரிசை I	வரிசை II
a. பிரம்ம சமாஜம்	1. சுவாமி விவேகானந்தர்
b. ஆரிய சமாஜம்	2. மேடம் பிளவாட்ஸ்கி
c. ராமகிருஷ்ண மிஷன்	3. ராஜாராம் மோகன்ராய்
d. பிரம்மஞான சபை	4. சுவாமி தயானந்த சரஸ்வதி

	a)	b)	c)	d)
A)	3	4	1	2
B)	3	2	1	4
C)	4	1	2	3
D)	1	3	4	2

191. கீழ்க்கண்ட ஆறுகளின் பெயர்களை பட்டியல் I–லிருந்து பட்டியல் II–ஐ பொருத்துக:

பட்டியல் I (பழைய பெயர்)	பட்டியல் II (புதிய பெயர்)
a. சுதுத்ரி	1. ஜீனாப்
b. விபாஸ்	2. சட்லெஜ்
c. பருஷினி	3. பியாஸ்
d. அஷிகினி	4. ராவி

	a)	b)	c)	d)
A)	1	2	3	4
B)	2	4	1	3
C)	1	4	2	3
D)	2	3	4	1

192. பின்வரும் இலக்கியப் படைப்புகளை கால வரிசைப்படுத்துக.

I முத்ரா ராக்ஷசம்

II. மத்தவிலாச பிரகசனம்

III. மிலின்தபன்ஹா

IV. அர்த்தசாஸ்திரம்

சரியான விடையளி

A) I, II, IV, III

B) III, IV, I, II

C) IV, I, III, II

D) IV, III, I, II

193. பாசிகளை ஆய்ந்தறியும் அறிவியலின் பெயர் என்ன?

A) ஃபிசியாலஜி

B) ஃபைக்காலஜி

C) மைக்காலஜி

D) போமாலஜி

194. இவற்றுள் எது BRIC தேசங்களின் அங்கம் இல்லை?

A) சிலி **B)** பிரேசில்

C) சீனா **D)** இந்தியா

195. பட்டியல் I–ஐ பட்டியல் II–உடன் ஒப்பிட்டு பார்த்து சரியாக பொருத்தவும். கீழ்க்கண்ட–வற்றிலிருந்து சரியான விடையை தேர்ந்–தெடுக்கவும்:

	பட்டியல் I	பட்டியல் II
a.	தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம்	1. 1985
b.	ஜவஹர் ரோஜ்கர் யோஜனா	2. 1993
c.	இந்திரா ஆவாஜ் யோஜனா	3. 1980
d.	பிரதம மந்திரி ரோஜகர் யோஜனா	4. 1989

	a)	b)	c)	d)
A)	4	1	3	2
B)	3	4	2	1
C)	3	4	1	2
D)	1	2	3	4

196. உலகின் அதிவேகமான சூப்பர் கம்ப்யூட்டர் ஜூன் 19, 2012–இல் அறிவிக்கப்பட்டதின் பெயர் யாது?

A) HCL **B)** செகுவோடியா

C) இன்டெல் **D)** லெனோவா

197. "இந்து வளர்ச்சி வீதம்" என்று பெயரிட்டவர் யார்?

A) தன்டேகர் மற்றும் இராத்

B) இராஜ் கிருஷ்ணன்

C) P.D. ஓஜா

D) B.S. மின்காஸ்

198. பின்வரும் நாடுகளை 2012 இலண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் பெற்ற மெடல் எண்ணிக்கையின் அடிப்படையில் இறங்கு வரிசையில் எழுது.

I. பிரிட்டன்

II. ரஷ்யா

III. சீனா

IV. அமெரிக்கா

சரியான விடையளி

A) I, III, II, IV

B) IV, III, I, II

C) IV, II, I, III

D) IV, I, III, II

199. மாநிலங்களில் ஜனாதிபதி ஆட்சியை ஏற்படுத்த பரிந்துரை செய்யும் விதி

A) விதி 354 **B)** விதி 355

C) விதி 356 **D)** விதி 357

200. 'வட ஒளிகள்', என்று பரவலாக அழைக்கப்படும் 'அரோரா போரியாலிஸ்' உருவாவதற்கான காரணம்

A) பூமியினது காந்தப்புலத்தில் பிடிபட்டுள்ள காஸ்மிக் கதிர் துகள் அணுமோதல்களை உருவாக்குகிறது

B) துருவங்களில், உள்ள ஒரு வகைச் சிறப்பு நின்றொளிர்தல் பொருள் அமைந்திருத்தல்

C) சூரிய மற்றும் பூமிக்கதிர் வீச்சுகளுக் கிடையேயான குறுக்கீட்டு விளைவு

D) இவை அனைத்தும்

விடைகள்

1.	(C)	2.	(B)	3.	(C)	4.	(B)	5.	(C)	6.	(B)	7.	(B)	8.	(A)	9.	(D)	10.	(A)
11.	(C)	12.	(C)	13.	(B)	14.	(D)	15.	(C)	16.	(D)	17.	(D)	18.	(B)	19.	(B)	20.	(B)
21.	(C)	22.	(C)	23.	(C)	24.	(A)	25.	(C)	26.	(D)	27.	(A)	28.	(A)	29.	(D)	30.	(D)
31.	(D)	32.	(B)	33.	(C)	34.	(D)	35.	(A)	36.	(C)	37.	(A)	38.	(D)	39.	(C)	40.	(C)
41.	(C)	42.	(A)	43.	(C)	44.	(B)	45.	(C)	46.	(C)	47.	(A)	48.	(C)	49.	(A)	50.	(C)
51.	(D)	52.	(C)	53.	(B)	54.	(B)	55.	(C)	56.	(B)	57.	(A)	58.	(A)	59.	(D)	60.	(B)
61.	(D)	62.	(D)	63.	(A)	64.	(C)	65.	(C)	66.	(C)	67.	(C)	68.	(B)	69.	(C)	70.	(A)
71.	(D)	72.	(A)	73.	(B)	74.	(A)	75.	(C)	76.	(B)	77.	(A)	78.	(B)	79.	(C)	80.	(D)
81.	(C)	82.	(A)	83.	(B)	84.	(A)	85.	(B)	86.	(C)	87.	(B)	88.	(C)	89.	(A)	90.	(C)
91.	(C)	92.	(D)	93.	(B)	94.	(D)	95.	(D)	96.	(A)	97.	(B)	98.	(C)	99.	(D)	100.	(A)
101.	(D)	102.	(C)	103.	(A)	104.	(D)	105.	(C)	106.	(A)	107.	(D)	108.	(D)	109.	(B)	110.	(C)
111.	(C)	112.	(D)	113.	(B)	114.	(B)	115.	(A)	116.	(B)	117.	(B)	118.	(A)	119.	(A)	120.	(D)
121.	(D)	122.	(B)	123.	(A)	124.	(D)	125.	(B)	126.	(B)	127.	(D)	128.	(C)	129.	(A)	130.	(B)
131.	(B)	132.	(C)	133.	(C)	134.	(D)	135.	(A)	136.	(B)	137.	(D)	138.	(C)	139.	(C)	140.	(B)
141.	(B)	142.	(A)	143.	(A)	144.	(A)	145.	(C)	146.	(C)	147.	(A)	148.	(B)	149.	(B)	150.	(B)
151.	(A)	152.	(B)	153.	(A)	154.	(B)	155.	(A)	156.	(B)	157.	(A)	158.	(D)	159.	(C)	160.	(D)
161.	(D)	162.	(B)	163.	(B)	164.	(C)	165.	(B)	166.	(C)	167.	(C)	168.	(C)	169.	(B)	170.	(C)
171.	(B)	172.	(A)	173.	(C)	174.	(A)	175.	(B)	176.	(C)	177.	(C)	178.	(A)	179.	(C)	180.	(A)
181.	(B)	182.	(A)	183.	(B)	184.	(A)	185.	(B)	186.	(A)	187.	(A)	188.	(B)	189.	(C)	190.	(A)
191.	(D)	192.	(C)	193.	(B)	194.	(A)	195.	(C)	196.	(B)	197.	(B)	198.	(B)	199.	(C)	200.	(A)

விளக்கமான விடைகள்

126. (B) $2a \times 1a = 41a \Rightarrow 26 \times 16 = 416$

$2b \times 1b = 37b \Rightarrow 25 \times 15 = 375$

$\Rightarrow a = 6,\ b = 5$

$\therefore a + b = 6 + 5 = 11$

127. (D) 62 ஐ தவிர மற்ற எண்கள் முழு வர்க்கங்கள்

128. (C) வட்ட மையத்தில் E–இன் வட்டக்கோணம்

$= \frac{15}{100} \times 360^{o} = 54^{o}$

129. (A) இரண்டுபாடத்திலும்தேர்ச்சிபெற்றமாணாக்கியர்களின் சதவீதம் $= (30 + 40 - 20)\% = 50\%$

131. (B)

R	I	V	E	R		W	A	T	E	R
↓−3	↓−3	↓−3	↓−3	↓−3		↓+3	↓+3	↓+3	↓+3	↓+3
O	F	S	B	O		Z	D	W	H	U

132. (C) $\frac{2}{3}$ பகுதி வேலையை செய்து முடிக்க எடுத்துக் கொள்ளும் நாட்கள் $= 10$

$\frac{1}{3}$ பகுதி வேலையை செய்து முடிக்க எடுத்துக் கொள்ளும் நாட்கள்

$= \frac{\frac{1}{3} \times 10}{\frac{2}{3}} = \frac{10}{2} = 5$ நாட்கள்

133. (C) மொத்த தொகை $= ₹\ 956$, அசல் $= ₹\ 800$

தனி வட்டி $= ₹\ 956 - ₹\ 800 = ₹\ 156$

$I = \frac{PNR}{100} \Rightarrow 156 = \frac{800 \times 3 \times R}{100}$

$\Rightarrow R = \frac{156 \times 100}{800 \times 3} = \frac{13}{2}\%$

$\therefore R = \left(\frac{13}{2} + 4\right)\% = \frac{21}{2}\%$ எனில்

மொத்த தொகை $= P + I = 800 + \frac{800 \times 3 \times 21}{2 \times 100}$

$= 800 + 252 = ₹\ 1052$

134. (D) அசல் = ₹ 6,000,

வட்டிவீதம் = 4%

முதலாம் ஆண்டு இறுதியில் தனிவட்டி

$= \frac{6000 \times 4}{100}$ = ₹ 240

இரண்டாம் ஆண்டுக்கான அசல்

= ₹ 6000 + ₹ 240 = ₹ 6240

இரண்டாம் ஆண்டு இறுதியில் தனிவட்டி

$= \frac{6240 \times 5}{100}$ = ₹ 312

மூன்றாம் ஆண்டுக்கான அசல் = 6240 + 312

= ₹ 6552

மூன்றாம் ஆண்டு இறுதியில் தனிவட்டி

$= \frac{6552 \times 10}{100}$ = ₹ 6552

மூன்றாம் ஆண்டு இறுதியில் மொத்த தொகை

= ₹ 6552 + ₹ 655.2 = ₹ 7207.2

135. (A) $D \xrightarrow{+15} S$; $T \xrightarrow{+3} W$; $J \xrightarrow{+10} T$

$\therefore G \xrightarrow{+9} P$

136. (B) 251 ஐ தவிர மற்ற எண்கள் பகு எண்கள்

137. (D) 312 ஐ தவிர மற்ற எண்கள் 11-ன் மடங்குகள்


175. (B) $2^3 = 8$; $3^2 = 9 \Rightarrow 2 \div 3 = 89$

$3^3 = 27$; $4^2 = 16 \Rightarrow 3 \div 4 = 2716$

$4^3 = 64$; $3^2 = 9 \Rightarrow 4 \div 3 = 649$

$1^3 = 1$; $2^2 = 4 \Rightarrow 1 \div 2 = 14$

178. (A)



179. (C) மைதானத்தின் ஆரம் r = 7 மீ

மைதானம் மற்றும் பாதையின் ஆரம் R

= 7 + 7 = 14 மீ

பாதையின் பரப்பு = $\pi(R^2 - r^2)$ ச.அ.

$= \frac{22}{7}(14^2 - 7^2)$

$= \frac{22}{7} \times (14+7) \times (14-7)$

$= \frac{22}{7} \times 21 \times 7 = 462$ ச.மீ.

180. (A) A-இன் ஒரு நாள் வேலை = $\frac{1}{12}$

B-இன் ஒரு நாள் வேலை = $\frac{1}{6}$

C-இன் ஒரு நாள் வேலை = $\frac{1}{3}$

(A+B)-இன் ஒரு நாள் வேலை = $\frac{1}{12} + \frac{1}{6}$

$= \frac{3}{12} = \frac{1}{4}$

மீதமுள்ள வேலை = $1 - \frac{1}{4} = \frac{3}{4}$

(A+B+C)-இன் ஒரு நாள் வேலை = $\frac{1}{12} + \frac{1}{6} + \frac{1}{3}$

$= \frac{1+2+4}{12} = \frac{7}{12}$

$\frac{3}{4}$ பகுதி வேலையை முடிக்க A, B மற்றும் C

எடுத்துக்கொள்ளும் நாட்கள் = $\frac{3}{4} / \frac{12}{7}$

$= \frac{9}{7}$ நாட்கள்

மொத்த வேலையை முடிக்க A, B மற்றும் C சேர்ந்து

எடுத்துக் கொள்ளும் நாட்கள் = $\frac{9}{7} + 1 = \frac{16}{7}$

$= 2\frac{2}{7}$ நாட்கள்

181. (B) C.I. = 9P என கொடுக்கப்பட்டுள்ளது

$9P = P\left(1 + \frac{r}{100}\right)^2$

$9 = \left(1 + \frac{r}{100}\right)^2$

$1 + \frac{r}{100} = \sqrt{9}$

$1 + \frac{r}{100} = 3$

$\frac{r}{100} = 2 \Rightarrow r = 200\%$

EXAM மாஸ்டர்

182. (A) $\sqrt[4]{\sqrt[3]{x^2}} = \left(\left(x^2\right)^{1/3}\right)^{1/4} = \left(x^{2/3}\right)^{1/4}$

$= x^{2/3 \times 1/4} = x^{1/6}$

184. (A) $43 = 4 \times 10 + 3$

$91 = 4 \times 22 + 3$

$183 = 4 \times 45 + 3$

185. (B) தேவையான ஜோடிகள்

(45, 60), (45, 75), (60, 75), (75, 90)

186. (A)

$$15 \overline{)\ 30,\ 60,\ 90,\ 105}$$
$$2,\ 4,\ 6,\ 7$$

30, 60, 90, 105 இன் மீ.பொ.வ. = **15**

ஆகவே அவர்கள் மீண்டும் சந்திக்க **15** மணி நேரங்கள் எடுத்துக்கொள்வர்

187. (A) மிகப்பெரிய 4 இலக்க எண் = **9999**

15, 25, 40, 75-ன் மீ.சி.ம. = **600**

$$\begin{array}{r} 16 \\ 600 \overline{)\ 9999} \\ \underline{600} \\ 3999 \\ \underline{3600} \\ 399 \end{array}$$

இவற்றால் வகுபடும் மிகப்பெரிய 4 இலக்க எண்

= 9999 – 399 = 9600

விளம்பரக் கட்டண விவரம்

EXAM மாஸ்டர் மாத இதழ்

விவரம்	கட்டணம் (ரூபாயில்)
கடைசி அட்டை பக்கம் (Back Cover) மல்டி கலர்	₹ 15,000/–
முதல் அட்டை பின்புறம் (Front Inner) மல்டி கலர்	₹ 12,000/–
கடைசி அட்டை பின்புறம் (Back Inner) மல்டி கலர்	₹ 10,000/–
கருப்பு & வெள்ளை **முழுப் பக்கம்**	₹ 7,500/–
கருப்பு & வெள்ளை **அரைப் பக்கம்**	₹ 4,000/–

கராவின் எம்ப்ளாய்மெண்ட் மாஸ்டர் வார இதழ்

விவரம்				
அகலம் (செ.மீ.)	உயரம் (செ.மீ.)	ச.செ.மீ.	விலை	
5	5	25	₹ 1,250/–	குறைந்த அளவு
5	10	50	₹ 2,500/–	
10	10	100	₹ 5,000/–	
10	15	150	₹ 7,500/–	கால் பக்கம்
10	20	200	₹ 10,000/–	
15	15	225	₹ 11,250/–	
15	20	300	₹ 15,000/–	அரைப் பக்கம்
20	30	600	₹ 30,000/–	முழுப் பக்கம்

விளம்பரதாரர் மற்றும் விளம்பர ஏஜென்டுகள் தொடர்பு கொள்க.

வளவன் – 9176461173 / V. டில்லி ராஜா – 9941476662

E-mail : advt@employmentmaster.in